Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.191/2024

**Depositions of PW- 1**

| | | | |
|---|---|---|---|
| Name | திரு. சொக்கமுத்து | Occupation | கூலிவேலை |
| Father's name | போத்திராஜ் | Calling | |
| Village | மங்காபுரம் | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 08th day of June 2026.

<u>08.06.2026</u>

எதிரிகள் ஆஜர்.

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது மங்காபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்கள் எனது உறவினர்கள். கடந்த 3 வருடத்திற்கு முன்னால் கருப்பட்டி சொசைட்டி அருகே சண்டை நடந்து கொண்டிருந்தது. நான் அருகில் சென்று பார்த்தபோது கூட்டத்தில் ஒருவர் என்னை அடித்துவிட்டார். யார் அடித்தார்கள் என்று நான் சரியாக பார்க்கவில்லை. என்னிடம் காட்டப்படும் புகார்மனுவிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். **புகார்மனுவிலுள்ள கையெழுத்து மட்டும் அசாஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்கக்கோரி அரசு தரப்பில் அனுமதி கேட்டதன் பேரில் அனுமதிக்கப்பட்டு சாட்சி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.**

**<u>அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

நான் கடந்த 02.10.2023 அன்று காவல்நிலையம் ஆஜராகி புகார் அளித்துவிட்டு போலீசார் விசாரணையின்போது கடந்த 01.10.2023 அன்று இரவு 11.15 மணியளவில்

நானும் நடராஜன் என்பவரும் கருப்பட்டி சொசைட்டி அருகே பேசிக்கொண்டிருந்தோம் என்றும் அப்போது அங்கு வந்த எதிரிகள் என்னிடம் சுந்தர், பாகுபலி, திருப்பதி ஆகியோர்களை பற்றி கேட்டபோது அசா.1 தெரியாது என்று சொன்னவுடன் அசா.1 ஐ பார்த்து அசிங்கமான வார்த்தைகளால் திட்டி கையாலும் பாம்பு கத்தியாலும் தாக்கி காயத்தை ஏற்படுத்தினார்கள் என்றும் அருகிலிருந்தவர்கள் சத்தம்போடவும் எதிரிகள் கத்தியை காட்டி என்னைக்கு இருந்தாலும் உன்னை கொல்லாமல் விடமாட்டோம் என்று மிரட்டிவிட்டு அங்கிருந்து சென்றுவிட்டார்கள் என்று கூறிவிட்டு தற்போது எதிரிகளுடன் சமரசமாகி சமரச மனு தாக்கல் செய்துள்ளதாலும் எதிரிகள் எனக்கு உறவினர்கள் என்பதாலும் உண்மையை மறைத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–இல்லை.</u>**

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.